உ

சிவமயம்.

பாலறுவாயர் துணை.

திருப்பரங்கிரி

மும்மணிக் கோவை.



இது

தேவகோட்டை, வயிநாகரம்

வே. இராமநாதன் செட்டியாரால்

தமது இருபதாம் ஆண்டு நிறைவுக்கு

அறிகுறியாக இயற்றப்பெற்று

கீழச்சிவற்பட்டி, பி. அழகாபுரி,

"நாஷனல்" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பெற்றது.

பவ-ஆண்டு

உ

சிவமயம்.

பாலறுவாயர் துணை.

திருப்பரங்கிரி
மும்மணிக் கோவை.



இது
தேவகோட்டை, வயிநாகரம்

வே. இராமநாதன் செட்டியாரால்

தமது இருபதாம் ஆண்டு நிறைவுக்கு
அறிகுறியாக இயற்றப்பெற்று

கீழச்சிவற்பட்டி, பி. அழகாபுரி,
"நாஷனல்" அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப் பெற்றது.

பவ-ஆண்டு

79/1

உ

சிவமயம்.

பாலருவாயர் துணை.

சாற்றுக் கவிகள்.

தேவகோட்டைச் சிவாகமசங்கத்துச் சித்தாந்த சாத்திர
போதகர், தூத்துக்குடி, திருவாளர்
போ. முத்தைய பிள்ளையவர்கள்:—

திருப்பரங் கிரியில் யானைத னணங்கைத்
திருமணம் புரிந்தவே லவற்குக்
கருத்தினிற் புலவர் கனிவுடன் வியக்கக்
காதலால் மும்மணிக் கோவை
விருப்புடன் செய்து சாத்தினன் றூய
வித்தையுஞ் சீலமு மறிவு
மிருப்பிட மாக வெழில்பெற வாழும்
இராமநா தன்எனு மணியே. க.

இன்னவன் தன்ன திருபதாம் வருடத்
தின்புறு நிறைவினை நினைந்து
பன்னிரு காத்துப் பாலற்கு மூன்று
பாவினாற் கோவைசெய் தனனு
லன்னவ னருளா லேவரும் போற்று
மழகிய வில்லற மெய்திப்
பொன்னுநற் புகழு மோங்கிட வென்றும்
புவிதனில் வாழிவா ழியவே. உ.

மதுரை, தமிழ்ப்பண்டிதர், பிரமஸ்ரீ

மு. முத்துவேங்கடாசலமையரவர்கள்:—

திருமா மடந்தை வதனமெனத் திகழு நளின நகும்பொய்கை
சிறப்புற் றிலங்கு மலர்ப்பொழில்சூழ் தேவை நகர்க்க ணு [றைகுருசி
லருமாண் புறுசொற் கலைஞர்தமக் களவில் சுவைநூ லமுதளித்தோ
னன்பன் இராம நாதன்என அவனி முழுது மிசைபடைத் [தோன்
கருமான் மகிழ நடம்புரிவோன் கழன்மே னவராத் தினமாலை
கருணை பொழியும் பரங்கிரியெங் கந்தன் மேன்மும் மணிக் [கோவை
பெருமான் குமர குருபரன்மேற் பிறங்கு போற்றித் திருவகவல்
பெரிதுஞ் சுவையோ டியற்றினனால் பெரும்பேர் பெற்று [வாழியரோ.

தேவகோட்டைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத்

தலைமையாசிரியர், திருவாளர்,

சோ. வேலுச்சாமிக் கவிராயரவர்கள்:—

திருமலி யுவணையிந் திரன்முதற் றேவர்
தருநிழல் வாழ்க்கையுந் தத்தம் பதவியும்
பண்டுபோற் பெறச்சூர்ப் பகைவனை வென்று
கொண்டல் கண்வளர் குளிர்பரங் குன்றில்
தெய்வ யானையைத் திருமணம் புரிந்தருள்
ஐயனு • முருகற் கன்புமீக் கூர்தர
மும்மணிக் கோவையு முதுநகர்த் தில்லையி
னம்மனோ ரெல்லா நன்கினி துய்தர

அற்புதத் தனிநட மனவர தம்புரி
சிற்பர நடேச தேவநா யகற்கு
நவரத்ன மாலையும் யாவரும் போற்ற
உவகையிற் குமர குருபரற் கொண்பொருட்
போற்றி நற்றிரு வகவலும் புனைந்தனன்
மேற்படுந் தகையவன் யாரென வினவிற்
பாவலர் புகழப் பல்வளந் திகழுந்
தேவ கோட்டைத் திருநகர் வாழ்வோன்
இணையிலா வைங்கர னின்னரு டழைக்குங்
கணேச மர்நகர்க் காண்டகு கோயிலான்
தண்டமி ழிலக்கண விலக்கிய சலதியி
னெண்கரை கண்டுணர்ந் தொழுகுஞ் சீலன்
ஈனசம் பந்த மிலாதெமக் கருள்புரி
ஞானசம் பந்த னற்பதத் தன்ப
ணுண்டொவ் வொன்றினு மழகெனும் பத்துங்
காண்டகு நூல்புனை கருத்துமிக் குடையோன்
துயல்வரு தளவத் தூநறுந் தாரோன்
வயி. நாக. ராம. வே. வளரும் விலாசன்
தராதலத் தியாவருஞ் சாற்றுஞ் சற்குண
இராம நாத வியற்பெய ரவனே.

பரிமணங்குடி, திரு. மு. முத்துப்பிள்ளையவர்கள்:—

தேவைவயி நாகரம்வே ஸ்ரீராம நாதன்நன்னூல்
யாவையுந்தேர் விற்பனன்வே லண்ணல்மணிக்—கோவைசொற்
[றன்
வாழியரீ டேழி மகிழ்ந்துபெருஞ் செல்வமுடன்
காழியர்கோன் றன்னருளாற் காண்.

சுபம்.

உ

சிவமயம்.

பாலருவாயர் துணை.

திருப்பரங்கிரி மும்மணிக் கோவை.

காப்பு.

நேரிசை வெண்பா.

பரங்குன்றிற் சேய்மகிழப் பன்னுமணிக் கோவை
தரங்குன்ற தெங்கலமுஞ் சாரக்—கரங்களஞ்சு
நாலுமுக மூன்றுவிழி நாதநிறை காதிரண்டொ
டேலுமருப் பொன்றுடையா யெண் க

கடலில் மிதந்துயர்ந்த காழிவரு காளை
மடலெழுதா மாமறைசொல் வான்சே—யடல்வலிமைச்
சிங்கமே றன்னமுலைத் தெள்ளமுத முண்டுசெய்யுள்
சங்கையறச் சொற்றோன் சரண் உ

நூல்.

நேரிசையாசிரியப்பா.

திருவடி வணங்குமின் திருவடி வணங்குமின்
பரங்கிரி விளங்குங் கரங்களீ ராறுடைக்
குமர நாயக னமருய வருடரத்
திருவடி வணங்குமி னுருவமை தெய்வக்
குஞ்சர மெழில்பெறக் கொஞ்சிய வுருவ
நெற்றிப் பாலன் கற்றை வார்சடைக்
கடவுள் கண்ணிணை யிடமெனத் தோன்றிய
கருணை வெள்ள மருணரா யிரவர்
காலு மொளியினு மேலு மொளிர்தரு
சோதி மாமயில் நாதன்
பொன்னடி நமது சென்னியிற் பூவே. க

நேரிசை வெண்பா.

பூமணக்கும் வான்றருக்கள் பொன்னுலக மன்னவளர்ந்
தேமமளித் தெங்கலமு மெய்துவிக்க—காமியத்தை
யெண்ணு விருடிகள்சேர்ந் தேத்துபரங் குன்றடைந்து
கண்ணால்முன் றுள்ளானைக் காண் உ

கட்டளைக் கலித்துறை.

காண்டற் கரிய பெருமா னெனினுநீ காதலொடு
வேண்டு மடியார் விரும்புவ தீந்து வினைகெடுத்துத்
தாண்டவ நீள்பவ நீக்குவ துன்னிச் சரணடைந்தே
னுண்டவ னாகிப் பரங்கிரி சேர்ந்த வருட்கடலே ௩

நிலைமண்டல வாசிரியப்பா.

கடனீர் சுவற வடனுடை வேல்விடு
புண்ணிய பரங்கிரி நண்ணிய நாதா
பாசித் திரைவை காசிற் றுயிர்க
ளானியற் றுடினர்க் காவணி யளிக்குஞ்
சரவணோற் பவதாள் பரவுத லுற்றே
னுளப்புரட் டாசிவ நிலைப்புறத் துய்க்கு
நின்னைப் பசித்தற் கென்னுள நாடிக்
கார்த்திகை சிறுவ வேத்தின னினிதே
மார்கழி யுவகை சார்தர வெந்தை
மாசிலா துனதடி பேசிலா பங்குனி
விருப்பொடு நின்றனன் பொருப்பமர் தேவே. ௪

நேரிசை வெண்பா.

வேதனைமுன் னுட்சிறையில் விட்ட பரங்கிரிக்கோன்
சீதமதி கொன்றையணி தேசிகற்கு—நாதனு
யோரகத்திற் ப்ரம்மோப தேசஞ்செ யெம்மிறைவ
னாகத்து வைப்பா னலம். ரு

கட்டளைக் கலித்துறை.

நலமுறுந் தென்பரங் குன்றமர் சேய்நின்றூர் நாடினளா
யலமருஞ் சோரு நெடிதுயிர்ப் பெய்திடு மாவெனவே
நிலமுற வீழ்ந்திடு மாமுரு காவென நின்றுகையைத்
தலைமிசை வைத்திடுஞ் சாமி யிவட்கருள் சாதிப்பையே

நேரிசை யாசிரியப்பா.

பைந்நா கம்வளர் மன்னவன் பாகப்
பனிவரை மகள்மகிழ் கனிவுடைப் பால
னெள்ளத் தனைவரு தெள்ளிய பசிக்கும்
பண்டியை யெக்கிப் பரிந்து குழைந்து
மணிவா யினைநெறித் தணிபெற வழுது
துள்ளி யிடம்புடை மெள்ளவே பெயர்ந்து
தொட்டிலை யுதைத்துக் கட்டை விரலைச்
சுவைத்துக் கடைவாய்த் துளிநீர் புவித்தலை
சிந்தத் தவழ்ந்து நந்தலில் செவ்வாய்
திறந்து குறுநகை சிறந்திட விளைத்து
அம்மைமுக நோக்கிக் கொம்மைமுலை வள்ளத்
தமுதுண் டிருந்த சுமுகன்
பரங்கிரி மேவிய பண்ணவன் றனே எ

நேரிசை வெண்பா

வன்மைமனத் தார்பரனன் மாதிரத்திற் பாயசத்தைப்
புன்மை யகலவெனப் போற்றிநின்று—நன்மைநிறை
கந்தற் குறித்துக் களத்திடுகின் றூரெனக்கி
தெந்தநல முந்தரா தே அ

கட்டளைக் கலித்துறை.

தேவன் பரங்கிரிச் செல்வனெனன் றேத்துநர் தீமையற
வாவ னிருதருக் காகா னடியருக் காதரவிங்
கீவ னுதல்விழித் தீயான் மகிழ்செம்ம லென்னுயிர்க்கச்
சாவனெக் காலத்துஞ் சாகான் மலரடி சார்மின்களே

நிலைமண்டல வாசியப்பா.

மின்னல் மேக மன்னிய சிகரப்
பரங்கிரிச் சாரல் பிறங்கிய தடாகக்
கரையிலா லின்கீழ்ப் பரவிய புகழ்சேர்
நக்கீர முனிவன் முக்கணற் போற்றிப்
பூசனை செயுங்கால் வீசுகிளை பொலிந்த
ஆலிலை பாதி சாலநன் னீரிலும்
பாதி நிலத்தின் மீதும் விழுந்து
நீர்ப்பாதி மச்சம் நிலப்பாதி பறவை
வடிவமுற் ழென்றை மற்றென் றிழுக்கப்
பூசனை புரிந்த மாசிலா முனிவ
னெஞ்சக மிங்குத் துஞ்சிட வதனல்
பூசைப் பங்கம் பொருந்திட முன்பு
அம்முறை வழுவிய செம்மை யாளர்
தொள்ளா யிரத்துத் தொண்ணூற் றென்பது
மக்களைக் குகையில் முக்கிய பூத
மற்று மொருவர்க் கற்ற நோக்கி
நக்கீ ரரையு மொக்க வடைத்துத்
தன்னிய மப்படி மன்னுமா யிரவரை

உண்ணுதற் கெண்ணித் தண்ணீர்ச் சுனையில்
மூழ்கச் சென்றது வாழ்வினை வேண்டி
அடைபட் டிருந்தோர் தடைபடா வாக்குக்
கிரரை வேண்டச் சூரனு தியரை
வென்ற வைவே னன்றுகொள் பெரும
நின்னை வேண்டி மன்னுமாற் றுப்படை
செய்தா யிரவருந் திருவரு ளாலுயிர்
வாழ வைத்தனர் வீழ்வினை யறுத்தே ௧௦

நேரிசை வெண்பா

அறுத்தா ரெனதுபவ மன்பன் பிழைகள்
பொறுத்தார் பரங்கிரியிற் போக—மறுத்தார்பின்
னென்னகழுஞ் சென்னியுமே யேற்றவிட மாவுறைந்தா
ரென்ன குறையுமிலை யெற்கு ௧௧

கட்டளைக் கலித்துறை.

குவளைநற் பூவணச் செவ்வாய் முகவள்ளி கூறுநலத்
தவளைப் புனவாயிற் கூடல்செய் தாண்ட வமரரிறை
குவவுகுற் றுலமுண் கோமகன் மாகோடுங் குன்றனைய
சவுரிய வாகுடைச் சாமி பரங்கிரி சார்ந்தவனே ௧௨

நேரிசை யாசிரியப்பா.

சாரு சாரு கூரல்சேர் சாரு
பத்திர நிறத்தொடு நத்திய தூல
மெனவமைந் திலங்கிக் கனமுறு கூரல்

சேருஞ் சாரு திகழ்தரு சாரு
என்றுயர் நீக்குதற் கின்றள வும்மொரு
தோழரைக் காணேன் வேழந் துணைகொடு
வள்ளியை மணந்த புள்ளுயர் துவசன்
சந்நிதி சென்று கன்னி யொருத்தி
நின்மயல் கொண்டுதன் றன்மைக ணீங்கி
யூணு முறக்கமும் பேணாள் வளைதுகில்
சோர்ந்தது மறியாள் நேர்ந்தவள் பாலடைந்
தின்னலை நீக்கெனப் பன்னல்
வேண்டின னெனது விருப்புரைப் பாயே ௧௩

நேரிசை வெண்பா.

பாயுந் தகரிப் பரந்த புவனமுற்றுங்
காயுங் குணத்தாற் கடிதழிக்க—நேய
மிகுவீர வாகுகொணர் மேடமுற வேறித்
தகுபரங்குன் றுற்றோன் சரண் ௧௪

கட்டளைக் கலித்துறை.

அண்மைநில் ஞாயிறு சென்றது திங்க ளணைந்தது நல்
வெண்மை யடைந்தது செவ்வாய் புதன்றிபாறி வியாழநெஞ்ச
ணுண்மை யிவணுற வெள்ளி தயமவற் குற்றதிலை
தன்மைப் பரங்குன்~~தினிசு~~ர்க் கசனியாச் சார்ந்தவனே
றசூர

நிலைமண்டில வாசிரியப்பா.

வன்றுய ரடைசுரர் மாதொர்பா கன்பாற்
சூரனு தியரால் நேரிடு மின்னலை

நீக்குதல் வேண்டத் திக்கணி லிருந்தர
ஞறு பொறிவிட வீறுசேர் வாயு
அப்பொறி கைக்கொண் டக்கினி கைதரக்
கனல்பொறுக் காதவன் புனலிடை விடுப்பக்
கார்த்திகை மாதர் பூத்தன ருதர
மக்க ளறுவரை யக்கணம் பெறவுமை
யிருமூன் றுருவையு மொருமுகப் படுத்தி
யறுமுகத் தொருவுரு வாக்க வளர்ந்து
சூரனை வென்று காரமர் புரந்தரன்
வானமர் தெய்வ யானையை வதுவை
கொள்ளென வேண்ட வள்ள லருஞ்சீர்
மங்கையை மணந்து துங்கநற் பரங்கிரி
சார்ந்தடி யவர்க்கரு ளீந்தனன் பெரிதே கசு

நேரிசை வெண்பா

பெரிதுதடங் கண்ணிமைக்கும் பிஞ்ஞகனின் சென்னி
மருவுபிறை போலுநுதல் வாடத்—தரும்வியர்வை
சூடு மலர்வாடுந் தூவடிடண் டோயுமிதா
னுடபரங் குன்றினளிங் நாரி கஎ

கட்டளைக் கலித்துறை.

நாகப் பணியார நாடும் பிரான்மக ஞரிட்டேலி
வேகப் படவுய்ப்பான் றம்பிநற் றேங்குழல் வேயுடையா
னேகப் படுமரு மான்றே ரதிரச வின்மொழிப்பெண்
ஞகப் பெருமகள் மைந்தன் பரங்கிரி நற்பொருளே கஅ

நேரிசையாசிரியப்பா.

பொருதுதா னவரை விருதுடன் போந்து
தெய்வ யானையைத் திருமணம் பூண்ட

பரங்கிரி நகரந் தரங்கமென் றிசைக்க
அல்லும் பகலும் பல்லவர் நிற்பர்
அன்னவ ரொழியினெ னன்னை துஞ்சாள்
அன்னை துஞ்சில் மன்னுமே விளைஞர்
காவலர் மறுகில் மேவுவ ரவரு
மருவா தொழியின் வெருவுற ஞாளி
மருட்சி செயுமது தெருட்டா திருப்பின்
வானத் திங்கள் வளம்பட வொளிசெயுந்
திங்க ளொளிசெயாத் திறத்திற் கூகை
குழறுதல் செய்யும் பழிபெற வில்லெனில்
விடியற் கோழியல் முடிவினை யுரைக்கு
மிப்பல விடுக்கண் தப்பிய நாளிற்
பன்னுமென் னுளங்கவர் பரங்கிரி
வாழுங் குமரர் சூழவா ரலரே கக

நேரிசை வெண்பா

அல்லமருங் கூந்த லணிதெய்வ குஞ்சரத்தை
நல்ல பரங்குன்றி னுடினுய்—லல்லையினில்
வள்ளியினை வேண்டி வதுவைசெய் தாய்முறையோ
எள்ளலிலா தித்தொழிலை யெண் உ0

கட்டளைக் கலித்துறை

எண்ணும் பரங்கிரி யின்ப மொடுவள ரெம்பெருமா
னண்ணு மிரவு வெகுவிரை வாக நடந்துவிடும்
புண்ணியன் போதா விரவுப் பொழுது புலர்வதிலை
யெண்ணிய விவ்விரண் டாலு மிராமிக் கிழிதகைத்தே உக

நிலைமண்டலவாசிரியப்பா

தக்க பரங்குன் றுெக்க வடைந்தனை
ஆறு முகமும் வீறுசேர் கரங்கள்

இருமூன் றிரண்டு மருவிடப் பெற்றனை
தோமரங் கொடிவா ளாமுயர் குலிச
மம்பங் குசமணி வெம்பிய தாமரை
தண்டம் வில்மழு மிண்டிய வடிவேல்
ஒன்னார் வெருவ மன்னினை கரத்தே
நூலணி மார்பினை சீலனு யுறைந்தனை
ஈரமி னெஞ்சச் சூரனு தியரை
வீர மழித்து விறல்கொடுத் தருளினை
பொன்னுல கடைந்து கன்னலந் தீஞ்சொல்
தேவ குஞ்சர மேவிடப் பெற்றனை
புண்ணியன் நீயே புராதனன் நீயே
கண்ணியன் நீயே கற்பக நீயே
எண்ணிய வெண்ணியாங் கெய்திடத் திருவருள்
பண்ணுதல் வேண்டிப் பணிந்தன னினையே. ௨௨

நேரிசை வெண்பா.

வதமறுஞ் செட்டி யியற்கரு மான்மருகன்
மோதவண்ணன் பிள்ளை முதலிருந்து—நீதியொடு
விக்கினங்க ணீக்கும் விநாயகற்குத் தம்பியாந்
தக்க பரங்கிரிநா தன். ௨௩

கட்டளைக் கலித்துறை.

தன்னே ரிலாத பரங்கிரி மால்வரை தன்னிடத்தே
யென்னே யநங்கன் பொருவதற் கெண்ணி யெதிரிருந்து
மின்னே கருப்புவில் வேல்வாள் சயந்தன மிக்கிருக்கக்
கொன்னே குழல்தரிற் போர்வெல லெங்ஙனங் கூறுவை
[யே. ௨௪

நேரிசையாசிரியப்பா.

வைப்பென வென்னுடை யெய்ப்பினி லுதவப்
பரங்கிரி நின்றருள் பண்ணவ வுன்னை
முத்தமிழ் கொண்டு மெத்தவை தாலும்
வாழவைப் பாயெனச் சூழுநின் னன்ப
னருண கிரிசொற் பொருணய முணர்ந்தே
நின்னை யியற்றமிழ் பன்னின
னெண்ணுவ திந்தருள் புண்ணிய ரேறே. உரு

நேரிசை வெண்பா.

ஏறூ னுந்தை யெழிலுருவிற் பார்திபெற்றான்
மாறுத பாணமா மன்னினுன்—கூறுகித்
தேவியா னனந்தச் செல்வன் பரங்கிரியாய்
மேவுமுனக் கம்மானே மேல். உசு

கட்டளைக் கலித்துறை.

மேலுயர் சென்னிப் பரங்கிரி யுற்ற விதமறிந்தே
னேலுந் தினைப்புன மங்குண்டு மால்வரை யின்சுவைத்
[தேன்
சாலவு முண்டு குறிஞ்சி நிலம்வளர் தையலரின்
பாலெனுஞ் சொல்லுண் டிவற்றின் சுவைபெறப் பற்றி
[னிரே. உஎ

நிலைமண்டல வாசிரியப்பா.

பற்றுன தடிமிசை நற்றவ கொண்டேன்
பிறந்தநாட் டொட்டுத் துறந்திடற் கரிய
காமம் வெகுளி யாமிருங் குப்பை
பலபடக் கிடப்பதை நிலைபெறப் போக்கி

விருப்பு வெறுப்பெனு மேடுபள் ளங்கள்
நிரவி வாய்மையாற் பரவிட மெழுகி
இருளற நின்ன தருள்விளக் கேற்றி
யுண்மை யென்னு முயர்தரு விதானம்
விரித்தென் மனத்தே மேவிடல் வேண்டுந்
தென்பரங் கிரியிற் றிகழ்தரு சேயே. உஅ

நேரிசை வெண்பா.

சேயாவா னப்பனகஞ் சேர்மயிலான் பாட்டன்பு
மேயாவன் னெஞ்சரிட மேவாதான்—தாயாகி
யெவ்வுயிருங் காக்க வெழில்சேர் பரங்குன்றில்
செவ்வியுடன் நின்றருளுந் தேவு. உகூ

கட்டளைக் கலித்துறை.

தேவாதி தேவனைத் தென்பரங் குன்றமர் செம்மலினை
மூவா முதல்வனை முத்திக்கு வித்தா முதியவனைச்
சாவா வொருவனைச் சைவ சமயமுஞ் சார்தமிழு
நாவாய்முந் நீருல கில்வளர்ப் போன்றனை நாடுதிரே. ௩0

வாழ்த்து.

வாழ்க பரங்குன்று வாழ்க முருகனருள்
வாழ்க தமிழ்சமயம் வண்மையுடன்—வாழியரோ
மாதமும் மாரி வளத்தா லுலகெங்கு
மோதுதெய்வ யானை யுடன்.

சுபம்.

திருப்பரங்கிரி மும்மணிக் கோவை
முற்றிற்று.

சிவமயம்.

பாலருவாயர் துணை.

நடராசர் நவமணிமாலை.

காப்பு.

நேரிசை வெண்பா.

தில்லைநட ராசர் திருவடியிற் சாத்துநறு
மல்லல் நவமணி மாலைக்குத்—தில்லைநகர்க்
கற்பகவி நாயகனுங் காழிக் கவுணியனும்
பொற்பருள்வர் மன்னிப் பொலிந்து.

நூல்.

நேரிசை வெண்பா.

சிற்றம் பலத்திற் சிவகாமி யம்மையுடன்
கொற்ற மிகவுறக் கூத்தாடு—நற்றவனை
யன்பர்க் கருள வபயவத்தங் குஞ்சிதத்தா
ளின்புறக்கொண் டானைநெஞ்சே யெண். க.

நிலைமண்டலவாசிரியப்பா.

எண்ணருஞ் சீர்த்தி நண்ணிய தில்லையிற்
பொன்னம் பலத்து மன்னிய திருக்கூத்
தாடும் பெரும நீடுநின் னடனஞ்
சிலநா ளுடலொடு நிலவிடு முயிர்கள்
பார்த்துக் களிப்புற் ரூர்ப்பரித் தின்பங்
கொள்ளுதல் முறையே வள்ளயி னெடுங்கண்
வாமபா கச்சிவ காம சவுந்தரி
யொருபா னின்றுகளி மருவியெந் நாளு
நோக்குத லென்னே மோக்கநற் கதியைத்
தந்திடும் பெரும வெந்தையீ துரையே. உ

தரவு கொச்சகக்கலிப்பா.

உரையென்னற் புகழென்ன வொருநாவை யளித்தாய்நீ
பரையாகத் திறையவனே பகர்தில்லை நடனபதீ
தரையின்மேல் வணங்கென்னத் தலைபளித்தா யிணங் [கென்ன
நிரையடியார் குழுவைத்தாய் நிருமலநற் கதியருளாய். ௩

குறளடி வஞ்சிப்பா.

கதிதருவது கடனுகுமே
யதியமரரு மயனரிமுதல்
தெரிதருவதற் கருமுதற்பொருள்
பதஞ்சலிமுனி பாய்மாமுனி
தொழுதருள்பெறத் துகளறுநடஞ்
சிதம்பரமெனுந் திருத்தலத்தினி
லடியார்
புகழப் புரியும் புண்ணிய
மகிழ்கர வருள்செய் மாமுனி யேறே. ௪

மருட்பா.

ஏறுயர்த்தோன் றில்லைக் கிறைவனிடத் தென்மயலை
வீறு பெறவுரைப்பார் வேறூர்கொல்—சேறுமிகு
வண்ணநறுங் காமலர்மேல் வண்டுகாள் தில்லைநக
ரண்ணல்மா லைத்தே னருந்துவதற்—கெண்ணிச்
செல்வது போலச் சென்றென்
துயர நீக்கிடச் சொல்லுமி னீரே. ரு

வெண்டாழிசை.

நீர்சேர் சென்னி நீடு மரவு
தார்சேர் கொன்றை சாரு நாத
னேர்சேர் தில்லை யிறை. சு

ஆசிரியத்துறை.

இறையவா தில்லைநக ரின்பமுற விருங்கூத்துச் செய்ப
முறையினு லொருகாலை யூன்றிவெகு நாட்கள் முடிந்த
[னவால்
இறையுமினி நிற்றல்முறை யில்லைவலி மிகுமே
துறையானே தூக்கியகா லையூன்றி மற்றொருகால் தூக்
[குவாயே. எ

கட்டளைக் கலித்துறை.

வாய்ந்தநல் லன்பர்கள் வேண்டுவ தீந்தருள் வள்ளலுயர்
வேய்ந்தவண் டில்லைப் பதியினி னட்டுவ னின்றியருள்
வாய்ந்தசீர்க் கூத்தினை யாடும் பிரான்மல்லல் வான்கங்
[கையான்
காய்ந்துவெம் போர்செய் முயலகன் காலுறக் காத்தவனே. அ

வஞ்சி விருத்தம்.

காத்த லழித்தல் படைத்தலே
யேத்து தொழில்க ளியற்றுவோன்
சாத்த னைத்தரு சங்கரன்
தீர்த்தன் சிற்றம் பலத்தனே. கூ

வாழ்த்து.

வாழ்கநட ராசரடி வாழ்கசிவ காமியடி
வாழ்க வடியார் வளர்ந்து.

சுபம்.

நடராசர் நவமணி மாலை முற்றிற்று.

சிவமயம்.

பாலருவாயர் துணை.

குமரகுருபர சுவாமிகள் போற்றித் திருவகவல்.

அமிழ்தினு மினிய தமிழ்மொழி வளர்க்கச்
சங்கரன் மலைமகள் தங்கவேற் கடவுள்
திண்டிறற் புலமைக் குண்டிகை முனிவன்
இன்னோர் தோன்றி மன்னிய கூடலைத்
தலைநக ரெனக்கொண் டிலகுறு மேன்மைப்
பாண்டிநன் னாட்டி லீண்டிய புகழ்சேர்
தாமிர பர்ணி யாமிரு நதியின்
வளநிறைந் தன்ப ருளமுறு முக்கண்
ணீசர் விரும்புகை லாச புரத்துத்
தாளாண் மையுறு வேளாண் குலத்துச்
சண்முக சிகாமணி வண்மையார் நாம
நற்றவன் மனைவி கற்றை வார்குழற்
சிவகாமி யம்மை தவநிறை வுறவரு
சேயே போற்றியெந் தாயே போற்றி
ஐந்தாண் டுகள்வரை செந்தா மரைவாய்
திறவா திருந்த செல்வா போற்றி
செந்தூ ரமர்ந்த வெந்திறல் வேலன்
நாவிலா றெழுத்தைத் தாவற வெழுதிக்
குமரகுரு பரனெனக் கூறிடப் பெற்ற
மணியே போற்றி யணிமிகுங் கந்தர்
கலிவெண் பாச்செய் வலியவ போற்றி

கூடல் அமர்ந்து பீடரு ளங்கயற்
கண்ணிபிள் ளைத்தமி ழெண்ணருஞ் சீர்த்தி
மிகவுற வியற்றிய மேலவ போற்றி
பிள்ளைக் கவியினைப் பெட்புற வரங்கத்
தேற்றிய நாளி லிமாசலன் மகடரு
முத்துமா லைபெறு வித்தக போற்றி
மீனாம் பிகைகுறம் விளங்கிரட் டைமணி
மாலையு மீசர் மதுரைக் கலம்பக
நூலுஞ் செய்தருள் சீலனே போற்றி
திருமலை நாயகர் பெருவிருப் பின்படி
நீதிநெறி விளக்க மோதினோய் போற்றி
நலமிகு மாரூர் நான்மணி மாலை
திருவாய் மலர்ந்தருள் தேசிக போற்றி
தரும புரத்துறுந் தாவில்கை லாய
பரம்பரை யமர்ந்த வரம்பிலாப் புலமை
மாசிலா மணிப்பெயர்த் தேசிகர் கட்டளை
சிரமேற் கொண்டு திகழ்தரு புலியூர்
சென்று மும்மணி செய்யுட் கோவைகள்
இருமணி மாலை யியற்றினோய் போற்றி
முத்துக் குமாரர் நத்துபிள் ளைத்தமிழ்
ஆக்கிப் புகழ்மிக வடைந்தோய் போற்றி
மாசி லாமணித் தேசிக ரடிக்கு
மும்மணிக் கோவைசொல் முன்னவ போற்றி
காசிக் கலம்பக மீச ரடியினிற்
சாற்றினோய் போற்றி சார்தரு டில்லி

பாக்ஷா விடத்துப் பாங்குறப் பேச
விந்துஸ் தானியா மினியநன் மொழியைச்
சகலகலா வல்லி தண்ணருள் சார
மாலைசெய் தறிந்த மன்னவ போற்றி
துர்க்கை யருளினாற் றனியுறச் சிங்கத்
தெருத்தத் தமர்ந்த வினியவ போற்றி
சைவ சமயமே யுய்வழி யீயு
முக்கண் ணீசனே முழுமுதற் கடவுள்
எனப்பல ரறிய நினைப்பருஞ் செய்கையாக்
காய்ச்சிய விரும்பைக் கைத்தலத் திட்டுச்
சத்தியஞ் செய்தருள் மெய்த்தவ போற்றி
டில்லிபா க்ஷாதரு நல்லதா மிடத்துக்
குமார சாமிமடங் கொண்டோய் போற்றி
வைகாசி மாதம் வளர்திரு தியையிற்
சிவனடி கலந்த செல்வா போற்றி
போற்றி போற்றி புண்ணிய போற்றி.

சுபம்.

குமரகுருபர சுவாமிகள் போற்றித் திருவகவல்
முற்றிற்று.

NATIONAL